அல்லாஹ்வின் திருப்பெயரால்

# நபிகள் நாயகம் (ஸல்) சிறு வயது ஆயிஷாவை திருமணம் செய்தது ஏன்?

வெளியீடு :

**தேசிய தவ்ஹீத் கூட்டமைப்பு**

மாநில தலைமையகம்,

30, ஜஹாங்கீர் தெரு, மண்ணடி,

சென்னை - 600 001.

**மாமனிதர் நபிகள் நாயகம்**

**நபிகள் நாயகம் பல திருமணம் செய்தது ஏன்?**

ஆகிய நூல்களை

முஸ்லிமல்லாதவர்கள் இலவசமாகப் பெற்றிட

99620 41110 என்ற எண்ணுக்கு

உங்கள் முகவரியை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

## நபிகள் நாயகம் (ஸல்) சிறு வயது ஆயிஷாவை திருமணம் செய்தது ஏன்?

அகில உலகிற்கும் அருட்கொடையாக இறைவனால் அனுப்பப்பட்ட மாமனிதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அப்பழுக்கற்ற வாழ்க்கை, திறந்த புத்தகமாக உலக மக்களுக்கு வைக்கப்பட்டுள்ளது.

அவர்கள் போதித்த கொள்கையிலோ, அவர்களின் வாழ்க்கை முறையிலோ எந்தக் குறையும் சொல்லமுடியவில்லையே என வயிற்றெரிச்சல் கொண்ட குறை மதியாளர்கள் சிலர், நபி (ஸல்) அவர்கள் ஆறு வயதில் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களை திருமணம் முடித்து ஒன்பது வயதில் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டது சரியா? என்ற விமர்சனத்தை முன்வைத்து, இஸ்லாத்தின் மீது மிகப் பெரும் களங்கத்தை ஏற்படுத்திவிடலாம், இஸ்லாத்தை அழித்துவிடலாம் என்ற கனவில் மிதக்கிறார்கள். அத்தகையவர்களுக்கு அறிவுப்பூர்வமான- தர்க்கரீதியான விளக்கத்தைத் தருவதற்கே இந்தச் சிற்றேடு.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆறு வயதுச் சிறுமியாக இருந்த ஆயிஷாவைத் திருமணம் செய்ததும், ஒன்பது வயதில் அவர் பருவ வயதை அடைந்த பின்னர் இல்லற வாழ்க்கை நடத்தியதும் உண்மை வரலாறு என்பதில் சந்தேகமில்லை.

இதன் சரியான காரணத்தை அறியாதவர்கள் சிறுமியை எப்படி திருமணம் செய்யலாம் என்ற கோணத்தில் தரம் தாழ்ந்த விமர்சனம் செய்து வருகின்றனர். இது பற்றி அறிவதற்கு முன்னால் இஸ்லாமிய மார்க்கம் உலக மக்களுக்கு எவ்வாறு வழங்கப்பட்டது என்பதை அறிந்து கொள்வது அவசியம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நாற்பதாம் வயதில் தம்மை அல்லாஹ்வின் தூதர் என்று மக்கள் மத்தியில் பிரகடனம் செய்தார்கள். அவ்வாறு பிரகடனம் செய்த காலகட்டத்தில் முழுக்குர்ஆனும் முழுச் சட்டங்களும் வழங்கப்படவில்லை.

அல்லாஹ்வை மட்டும் வணங்குங்கள்! வேறு எந்தப் படைப்புகளையும் வணங்க வேண்டாம் என்ற ஓரிறைக் கொள்கை மட்டுமே அவர்களுக்கு அப்போது வழங்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் அல்லாஹ்வைத் தவிர யாரையும், எதனையும் நான் வணங்கமாட்டேன் என்று உறுதியேற்பது மட்டுமே நபிகள் நாயகம் அவர்களின் ஒரே போதனையாக இருந்தது. தொழுகை, நோன்பு, போன்ற வணக்கங்கள், வியாபாரம், திருமணம், கொடுக்கல் வாங்கல், ஆட்சிமுறை உள்ளிட்ட சட்டங்கள் அப்போது அவர்களுக்கு அருளப்படவில்லை.

அன்றைய சமுதாயத்தின் வழக்கம் எதுவாக இருந்ததோ அதன்படியே திருமணம், வியாபாரம் மற்றும் இதர காரியங்களை நபிகள் நாயகமும் செய்து வந்தார்கள். அவர்களைப் பின்பற்றிய மக்களும் அப்படியே நடந்து கொண்டார்கள். அன்றைக்கு அதுமட்டுமே போதுமானதாக இருந்தது.

முழுக்குர்ஆனும் அருளப்பட்டு முடிக்க 23 ஆண்டுகள் ஆயின. 23 ஆண்டுகளில் சிறிது சிறிதாக ஒவ்வொன்றாக சட்டங்கள் அருளப்பட்டவுடன் அதன்படி நடக்கலானார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மை இறைத்தூதர் என்று பிரடகனம் செய்த காலத்தில் சிறுமிகளைத் திருமணம் செய்யும் வழக்கம் சர்வசாதாரணமாக நடைமுறையில் இருந்தது.

எந்த உறுத்தலும் இல்லாமல் அன்றைய மக்கள் சிறுமிகளைத் திருமணம் செய்து வந்தனர். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்களும் அதன்படியே சிறுமிகளைத் திருமணம் செய்தார்கள்.

நபிகள் நாயகத்தின் உயிருக்கு உயிரான தோழர் அபூபக்கர்(ரழி) அவர்களின் மகளாக ஆயிஷா இருந்ததால் தனக்கும் நபிகளுக்கும் குடும்ப உறவு ஏற்பட வேண்டும் என்ற அபூபக்கர்(ரழி) அவர்களின் விருப்பத்தின் காரணமாக, அவர்கள் தமது மகளை நபிகள் நாயகத்துக்கு மணமுடித்து வைத்தார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய பண்டைய காலத்திலும், அவர்களுக்கு பிறகு பல நூற்றாண்டுகள் பிந்தைய காலத்திலும் இந்த பால்ய விவாக வழக்கம் இருந்துள்ளது என்பதை இந்திய இதிகாசங்களிலும், உலக வரலாறுகளிலும் நாம் காணலாம்.

- ★ **12ஆம் நூற்றாண்டில் ஃப்ரான்ஸ் இளவரசி செசில் திருமணம் செய்யும் போது, அவருக்கு வயது எட்டு.**
- ★ **12ஆம் நூற்றாண்டில் ஃப்ரான்ஸ் அரசி ஆக்னஸ் திருமணம் செய்யும் போது, அவருக்கு வயது எட்டு.**
- ★ **14ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து இளவரசி எலிசபெத் பாடில்ஸ்மியர் திருமணம் செய்யும் போது, அவருக்கு வயது மூன்று.**
- ★ **14ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து இளவரசி கேத்தரீன் மோர்டிமர் திருமணம் செய்யும் போது, அவருக்கு வயது ஐந்து.**

★ **14ஆம் நூற்றாண்டில் ஸ்காட்லாந்து இளவரசி ஜோன் திருமணம் செய்யும் போது, அவருக்கு வயது ஏழு.**

★ **15ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து இளவரசி ஆன் மோப்ரேவை ஐந்து வயதில் திருமணம் செய்து கொடுத்தார்கள்.**

★ **இந்தியாவின் புகழ் பெற்ற ஆன்மீக குரு ராமகிருஷ்ண பரமஹம்சர் திருமணம் செய்யும் போது சாரதா தேவிக்கு வயது ஐந்து.**

★ **கடவுள் அவதாரமாக நம்பப்படும் இராமர் திருமணம் செய்யும் போது சீதாபிராட்டிக்கு வயது ஆறு.**

★ **இருபதாம் நூற்றாண்டு இந்தியாவின் புகழ்பெற்ற சட்ட மாமேதை, இந்திய அரசியல் சாசன சிற்பி என போற்றப்படும் டாக்டர். அம்பேத்கார் தனது முதல் மனைவி ராமாபாயை திருமணம் செய்யும் போது ராமாபாய்க்கு வயது எட்டு.**

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை கூட சிறுமியை எந்த உறுத்தலும் இல்லாமல் திருமணம் செய்துள்ளனர் என்றால் 1400 ஆண்டுகளுக்கு முன் இது எவ்வளவு சாதாரண விஷயமாக இருந்திருக்கும் என்பதை நபிகள் நாயகத்தை குறை காண்பவர்கள் சிந்திக்க வேண்டும். கடந்த காலத்தில் சிறுமியைத் திருமணம் செய்தவர்கள் அது தவறு தான் என்று சட்டம் கொண்டு வரவில்லை.

ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்றைய சமுதாய வழக்கப்படி சிறுமியைத் திருமணம் செய்தாலும் பின்னர் திருமணம் குறித்த சட்ட வழிகாட்டலை இறைவன் அவர்களுக்கு அறிவித்த பிறகு இதைத் தடை செய்து விட்டார்கள். பிற மதங்களில் மதச்சட்டம் மூலம் சிறுமியை திருமணம் செய்வது தடுக்கப்படவில்லை.

விபரமில்லாத சிறுமிகளைத் திருமணம் செய்வதை இஸ்லாம் மட்டும்தான் முற்றாகத் தடை செய்ததைப் பின்வரும் ஆதாரங்களிலிருந்து அறியலாம்.

**பெண்களுக்குக் கடமைகள் இருப்பது போல அவர்களுக்கு உரிமைகளும் சிறந்த முறையில் உள்ளன.**

திருக்குர்ஆன் 2:228

தன் கணவனைத் தேர்வு செய்யும் உரிமையைப் பெண்ணுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளது. விபரமுள்ள பெண்களே இந்த உரிமையைச்

சரியாகப் பயன்படுத்த முடியும். சிறு வயது பெண்கள் சுயமாக தனது கணவனைத் தேர்வு செய்யும் நிலையில் இல்லை.

**நம்பிக்கை கொண்டோரே! பெண்களை வலுக்கட்டாயமாக அடைவது உங்களுக்கு அனுமதி இல்லை.**

திருக்குர்ஆன் 4:19

**கன்னிப் பெண்ணிடமும், விதவையிடமும் சம்மதம் பெற வேண்டும் என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறிய போது, கன்னிப் பெண் வெட்கப்படுவாளே? என்று நான் கேட்டேன். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவளது மௌனமே அவளது சம்மதமாகும் என்று கூறினார்கள்.**

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி)

நூல்: புகாரி 6971, 6964, 5137

**என் தந்தை எனது சம்மதம் பெறாமல் எனக்கு மணமுடித்து வைத்தார். அதனை விரும்பாத நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து கூறிய போது, அத்திருமணத்தை ரத்து செய்தார்கள்.**

அறிவிப்பவர்: கன்ஸா பின்த் கிதாம் (ரலி)

நூல்: புகாரி 5139, 6945, 6969

**அப்பெண்கள் உங்களிடம் கடுமையான உடன்படிக்கையை எடுத்துள்ளார்கள்.**

திருக்குர்ஆன் 4:21

இந்த வசனத்தில் திருமணத்தை ஒரு கடுமையான ஒப்பந்தம் என்று திருக்குர்ஆன் கூறுகின்றது. அந்த ஒப்பந்தம் செய்வதற்கான தகுதியும், முதிர்ச்சியும் பருவ வயதை அடைந்தால் தான் ஏற்படும்.

மண வாழ்க்கையில் தன்னுடைய உரிமைகள் என்ன? கடமைகள் என்ன? தனக்குக் கணவனாக வருபவர் எவ்வாறு இருக்க வேண்டும்? என்று நன்கு ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு ஏற்ற வயதில் தான் பெண்களின் திருமணங்கள் நடைபெற வேண்டும் என்பதை மேற்கண்ட திருக்குர்ஆன் வசனங்களும், ஹதீஸ்களும் உறுதி செய்கின்றன.

திருமணம் என்பது கடுமையான உடன்படிக்கை என்றால் கணவன் மனைவி ஆகிய இருவரும் திருமணம் என்றால் என்ன? எதற்காகத் திருமணம் செய்யப்படுகிறது? ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள

வேறுபாடு என்ன? என்பதையெல்லாம் அறிந்தால் தான் அதை ஒப்பந்தம் என்று கூற முடியும்.

இதை எல்லாம் அறிய முடியாத பருவத்தில் உள்ள ஆணுக்கோ பெண்ணுக்கோ திருமணம் செய்விப்பதற்கு இப்போது அனுமதி இல்லை.

இந்தச் சட்டம் நடைமுறையில் இல்லாத காலத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இஸ்லாத்தை ஏற்ற பலரும் சிறுமிகளைத் திருமணம் செய்திருந்தனர்.

இத்திருமணம் இறைவன் தடை செய்வதற்கு முன்னர் நடந்தது என்பதால் நபிகள் நாயகத்தின் ஒழுக்கத்தை இது பாதிக்கும் என்று கருத எந்த நியாயமும் இல்லை.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பால்ய விவாகத்தை தவறு என்று எப்போது போதித்தார்களோ அதன் பின்னர் அவர்கள் பால்ய வயதுடைய சிறுமியைத் திருமணம் செய்திருந்தால் தான் அதைக் குறை கூற முடியும்.

தடை செய்யப்படாத காலகட்டத்தில் ஊர் வழக்கப்படி இத்திருமணம் நடந்ததால் இது விமர்சனத்துக்கு உரியதாக ஆகாது.

கடவுள் மறுப்புக் கொள்கையைப் பிரச்சாரம் செய்யும் ஒருவர் இப்பிரச்சாரம் செய்வதற்கு முன் கோவில் தர்மகர்த்தாவாக இருந்திருக்கலாம். அப்போது கடவுள் வழிபாட்டை நடத்தி இருக்கலாம். கடந்த கால செயல்பாட்டில் இருந்து அவர் விலகிய பின் அதை இப்போது விமர்சிப்பது நியாயமான விமர்சனமாக ஆகாது. அது தவறு என்ற பிரச்சாரத்தை மேற்கொண்ட பின்னர் அவர் கடவுள் வழிபாடு செய்தால் அது தான் விமர்சனத்துக்கு உரியதாகும்.

**திருமணம் செய்து கொண்டது சரி. அந்த சிறுமி ஒன்பது வயதை அடைந்த பின் அவருடன் உடலுறவு கொண்டது நியாயமா?**

இப்படியும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

உரிய முறையில் சிந்தித்தால் இந்தக் கேள்வி தவறு என்பதை உணரலாம்.

இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் பருவ வயது அடைந்த பெண்ணுடன் திருமணத்தின் மூலம் உடலுறவு கொள்ளலாம் என்ற சட்டம் இருந்துள்ளது. வெள்ளையர் காலத்தில் 12 வயதுக்கு முன் உடலுறவு கொள்ளக் கூடாது என்று சட்டம் கொண்டு வரப்பட்டது.

அதற்கு முந்தைய காலத்தில் பருவம் அடைந்த பத்து வயதுப் பெண்ணை திருமணம் செய்த நமது முப்பாட்டன்மார்களை சிறுமியை வல்லுறவு செய்தார்கள் என்று அறிவுடையோர் சொல்வார்களா?

நமது தகப்பன்கள் காலத்தில் பெண்ணின் திருமண வயது 16 என்று இருந்தது. இன்று 18 ஆக ஆக்கப்பட்டுள்ளது. 21 ஆக ஆக்கும் திட்டத்தில் உள்ளனர்.

தடுக்கப்படாத காலத்தில் 16 வயது பெண்ணை உங்கள் தந்தை திருமணம் செய்து கொண்டு இருந்தால் அவர் வல்லுறவில் ஈடுபட்ட குற்றவாளியாக ஆவாரா?

காலத்துக்கு காலம் பெண்ணின் திருமணம் வயதை அதிகரிக்கிறார்கள். பெண்கள் ஏமாற்றப்படுவது அதிகமாகும் போது திருமண வயது குறைக்கப்படலாம். இதை வைத்து ஒழுக்கத்தை அறிவுடைய மக்கள் எடை போட மாட்டார்கள்.

ஆண்களை விட பெண்கள் உடலுறவுக்கு சீக்கிரம் தயாராகி விடுகிறார்கள் என்பது தான் அறிவியல் உண்மையாகும். மாதவிடாயின் அர்த்தமே இது தான்.

பருவம் அடையும் போது பெண்களிடம் மாதம் தோறும் சினைமுட்டைகள் உருவாகின்றன. அத்துடன் குழந்தை உருவானால் அக்குழந்தைக்கு சொகுசாக இருக்கும் வகையில் கருவறையின் உட்சுவற்றில் மென்மையான ஒரு படலம் உருவாகின்றது. ஆணுடைய உயிரணுவுக்காக காத்திருக்கும் சினை முட்டை ஏமாற்றமடையும் போது கருவறையின் உட்சுவரில் ஏற்படுத்தப்பட்ட மெத்தை போன்ற படலம் கரைந்து மாதவிடாயாக வெளியேறுகிறது.

ஒவ்வொரு மாதமும் குழந்தை உருவாவதை எதிர்பார்த்து கருவறை ஏமாற்றமடைவது தான் மாதவிடாய் எனப்படுகிறது.

ஊரும், உலகமும் என்ன சொன்னாலும் பெண்களின் உடற்கூறு சொல்லும் உண்மை இது தான்.

தனக்கு எப்போது ஒரு ஆண் துணை கிடைக்கும் என்று உடல் ஏங்கும் போது அதை இல்லை என மறுப்பது மடமை என்று தான் சொல்ல வேண்டும்.

மேலும் பருவமடைந்து ஓரிரு வருடங்களில் சில பெண்கள் காதல் வயப்பட்டு ஓட்டம் பிடிக்கின்றனர். மைனர் பெண் கடத்தல் என்று இதற்கு பொய்முலாம் பூசப்பட்டாலும் அந்தப் பெண் தனது உடல் தேவை காரணமாக அவளாகத் தான் ஓட்டம் பிடிக்கிறாள் என்பது கண் முன்னே தெரிகிறது.

இந்த உண்மைக்கு மாற்றமாக 18 வயதில் தான் அவள் தயாராவாள் என்று கூறுவது அறியாமை அல்லவா?

தாமதமாக திருமணம் செய்வதால் கருவறையின் ஆற்றல் குறைந்து விடும் என்று ஒரு பக்கம் அறிவியலாளர்கள் சொல்லிக் கொண்டிருக்க அறிவாளிகள் என்ற போர்வையில் சிலர் 22 வயதுக்கு மேல் திருமணம் செய்யுங்கள் என்று உளறிக் கொண்டு இருக்கின்றனர்.

உடலாலும், மனதாலும் பெண்கள் திருமணத்துக்குத் தயாராகி விடுவதன் அடையாளமே பருவமடைதல் என்ற உண்மையைப் புரிந்து கொள்ளாத காரணத்தால் பெண்களுக்கு கொடுமை தான் இழைக்கின்றனர்.

இயற்கையை எதிர்த்து நிற்கக் கூடாது. மரங்களை வெட்டக் கூடாது என்றெல்லாம் கூப்பாடு போடும் அறிவு ஜீவிகள் பெண்கள் விஷயத்தில் மட்டும் இயற்கையை எதிர்த்து நின்று பெண்களுக்கு கேடு விளைவிக்கின்றனர்.

இருபது வயதுக்குள் குழந்தை பெற்றால் தான் அது பெண்ணின் உடல் நலத்துக்கும் ஏற்றது. அந்தக் குழந்தை வளர்ந்து தாயைக் கவனிக்கும் நிலை ஏற்படும். இதையும் கூடுதலாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

அன்றைய அரபு சமுதாயத்தில் செல்வச் செழிப்போடு வளரும் பெண் குழந்தைகள் எட்டு வயதில் பருவமடைவார்கள். எட்டு வயதில் உடலுறவுக்கான ஆசை அவர்களுக்கு ஏற்பட்டு விடும். குழந்தையை உருவாக்கும் சினை முட்டைகள் மாதம் தோறும் அவர்களிடம் உருவாக ஆரம்பித்து விடும். அவர்களின் கருவறை குழந்தையைச் சுமக்க முழுத்தகுதி பெற்று விடும்.

உடல் கூறு அடைப்படையில் பருவ வயதுடைய பெண்ணின் திருமணத்தை சட்டத்தின் மூலம் தடை செய்வதால் கெட்ட செயல் என்ற கருத்துருவாக்கம் ஏற்பட்டுள்ளது. இதை தீய செயல் போல் காட்டுகிறார்கள்.

பெண்களின் உடற்கூறு அடிப்படையில் பருவ வயதை அடைந்த பெண்ணுடன் இல்லறம் நடத்துவது பழிப்பிற்குரிய செயல் அல்ல.

இந்திய மக்களின் நூறு கோடிக்கும் அதிகமானவர்கள் 18 வயதுக்கு குறைந்த அம்மாக்களுக்குப் பிறந்தவர்கள் தான். இவர்கள் கெட்டவர்கள் அல்ல. இவர்களுடன் இல்லறம் நடத்திய ஆண்கள் பாலியல் குற்றவாளிகளும் அல்லர்.

எனவே பருவ வயது அடைந்த பெண்ணுடன் இல்லறம் நடத்துவதை விஞ்ஞான ரீதியாக உடல் கூறு ரீதியாக தவறு என்று நிரூபிக்க முடியாது.

✤✤✤✤✤✤✤